# நான் இன்று முதல் உங்களை ஆசீர்வதிப்பேன். ஆகாய் 2 : 19

**"நூறு மடங்கு பலன்" இந்த ஆண்டு**

**"என் தகப்பனே, என்னை ஆசீர்வதியும்"**

புது ஆண்டிற்குள் அடி எடுத்து வைத்திருக்கும் என் அன்பு சகோதரனே, சகோதரியே இந்த மாதம் முழுவதும்
என் தகப்பனே, என்னை ஆசீர்வதியும்,
என் தேவனே, என்னை ஆசீர்வதியும்,
என் இயேசுவே, என்னை ஆசீர்வதியும்,
என் தேற்றரவாளனே என்னை ஆசீர்வதியும்.

என்பதாக நொறுங்குண்ட இதயத்துடன் கதறுங்கள். ஏனெனில் வேதம் சொல்கிறது,

"கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்; அதனோடே அவர் வேதனையைக் கூட்டார்." – என்பதாக.

**நீதி 10 : 22**

இன்று உங்களுக்குத் தேவை, கர்த்தருடைய ஆசீர்வாதம். கடந்த ஆண்டில், கர்த்தருடைய ஆசீர்வாதம் இல்லாதபடி எவ்வளவு தோல்வி, எத்தனை ஏமாற்றம், எத்தனை மன வேதனை, எத்தனை போராட்டம், எத்தனை கசப்பு, எத்தனை கடன், எத்தனை நிந்தை, எத்தனை பரியாசம், போதும், போதும்.

**கர்த்தர் சொல்கிறார்,**

**"நான் இன்று முதல் உங்களை ஆசீர்வதிப்பேன்"** என்பதாக.

**ஈசாக்கு அந்த தேசத்தில் விதை விதைத்தான்; கர்த்தர் அவனை ஆசீர்வதித்ததினால், அந்த வருஷத்தில் நூறு மடங்கு பலன் அடைந்தான். ஆதி. 26 : 12**

இதே ஆசீர்வாதம் உங்களுக்கும் இந்த வருடத்தில் காத்துக் கொண்டிருக்கிறது. ஆமென்.

**நான் இன்று முதல் உங்களை ஆசீர்வதிப்பேன்** – என்பதாக கர்த்தர் வாக்குத்தத்தம் செய்துவிட்டார். ஆதலால் இனிமேல் நாம் செய்ய வேண்டியது என்ன ?

**"என் இயேசுவே என்னை ஆசீர்வதியும்"**

என்பதாக கெஞ்ச வேண்டும். அப்படி மனந்திறந்து அவரோடே ஒப்புரவாகி, ஜெபித்தால், இந்த ஆண்டு நூறு மடங்கு பலன் காத்துக் கொண்டிருக்கிறது. கர்த்தருக்கே மகிமை!

நம்முடைய தேவனுக்கு, நம்மை ஆசீர்வதிப்பதே பிரியம். இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்குப் பிரியம். உன்னை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்குப் பிரியம். ஆதலால் கேளுங்கள். தைரியமாய் கேளுங்கள்.

**"கேளுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; கேட்கிற எவனும் பெற்றுக்கொள்கிறான்."**
மனம் திறந்து கேளுங்கள்; கண்ணீரோடு கேளுங்கள். உடைந்த உள்ளத்தோடு கேளுங்கள். ஸ்தோத்திரத்தோடே கேளுங்கள். அப்பொழுது கீழ்க்கண்ட ஆசீர்வாதங்கள் உங்கள் மேல் பலிக்கும்.

**வேதம் சொல்கிறது,**

1. உன்னை ஆசீர்வதித்து உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்;
   நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்; உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன். **ஆதி. 12 : 2,3.**
2. அவர் உன் அப்பத்தையும் தண்ணீரையும் ஆசீர்வதிப்பார்;
   வியாதியை உன்னிலிருந்து விலக்குவேன். **யாத்தி. 23 : 25.**
3. உன் தேவனாகிய கர்த்தர் உன் கைகள் செய்யும் எல்லா வேலைகளிலும் உன் கர்ப்பத்தின் கனியிலும், உன் மிருக ஜீவனின் பலனிலும், உன் நிலத்தின் கனியிலும் உனக்குப் பரிபூரணமுண்டாகச் செய்வார். **உபா. 30 : 9**
4. ஏற்றக் காலத்தில் மழை பெய்யப்பண்ணுவேன், ஆசீர்வாதமான மழை பெய்யும். **எசே. 35 : 26** – என்பதாக.

கர்த்தருக்கு ஊழியம் செய்யும் என் உடன் ஊழியரே இயேசு சொல்வதைக் கேளுங்கள்.

"என்னிமித்தமாகவும், சுவிசேஷத்தினிமித்தமாகவும் வீட்டை–யாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனும், இப்பொழுது இம்மையிலே துன்பங்களோடே கூட நூறத்தனையாக வீடுகளையும், சகோதரரையும், சகோதரிகளையும், தாய்களையும், பிள்ளைகளையும், நிலங்களையும் மறுமையிலே நித்திய ஜீவனையும் அடைவான்" – என்பதாக.

**"நான் இன்று முதல் உங்களை ஆசீர்வதிப்பேன்"**

என சேனைகளின் கர்த்தர் கூறுகிறார். விசுவாசிக்கிறீர்களா ?

உங்கள் விசுவாசத்தின்படியே ஆகக்கடவது.